அக்குரஸ்ஸ பிரதேச சபை
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 06 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அக்குரஸ்ஸ பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 இன் உள்ளூராட்சி விளையாட்டு விழாவிற்காக 2011 நவம்பர் 28 ஆந் திகதி ரூபா 20,000 தொகையான முற்பணம் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரினால் பெறப்பட்டிருந்த போதிலும் அத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன் பெறவேண்டிய மீதியாகக் கணக்குகளில் வைக்கப்படவும் இல்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதன உதவி கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 23,314,279 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 32 இன் மூலம் ரூபா 18,222,775 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டமையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்ட தொகை ரூபா 5,091,504 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 9,018,794 தொகையான வேலைக் கடன்கொடுத்தோரின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் செலவினங்களைப் பதியும் போது முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்ட கடன்கொடுத்தோருக்காக மீண்டும் ஒரு தடவை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 16,717,625 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மூலதன உதவி, பிரதான பேரேட்டின் பிரகாரம் ரூபா 34,656,778 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கில் அதன் பெறுவனவுகள் ரூபா 37,981,873 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்ட தொகை ரூபா 3,325,095 ஆகும்.

(ஊ) ரூபா 760,510 தொகையான அத்துரலிய பிரதேச சபை கடன் கணக்கு நீண்ட காலமாக தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 1,000 மற்றும் ரூபா 15,181,943 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 44,162,855 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,570,625 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய

ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,421,145 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,081 | 3,087 | 1,640 |
| (ii) | வாடகை | 3,920 | 4,567 | 3,240 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 881 | 875 | இல்லை |
| (iv) | ஏனைய வருமானம் | 8,547 | 8,926 | 24,766 |

### 2.2.2 ஆதன வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அறவிடவேண்டிய ரூபா 1,007,610 தொகையான ஆதன வரியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாட்டின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஆதன வரிக்காக ரூபா 2,342,598 தொகைக்கு பற்றுச்சீட்டிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 1,727,549 மாத்திரமாகும். அவ்வாறே 2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 1,053,456 தொகையான நிலுவைப் பணத்திலிருந்து மீளாய்வாண்டில் அறவிடக்கூடியதாக இருந்த தொகை ரூபா 470,621 மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் ஆதனவரி அறவிடும் செயல்முன்னேற்றம் முறையே 74 சதவீதம் மற்றும் 45 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 நிலவாடகைக் கட்டணம்

நிலவாடகை உடன்படிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் வருடாந்த நிலவாடகைத் தொகை ஆண்டின் போது 12 பகுதிகளாக அல்லது ஒரே தடவையில் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 31 கடைகளிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 533,227 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் அக்குரஸ்ஸ பொதுச் சந்தைத் தொகுதியில் 56 கடைகளிலிருந்து ரூபா 4,559,622 தொகையான ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்படாதிருந்ததுடன் வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் மாதாந்த வாடகை செலுத்தாத 111 கடைகளிலிருந்து ரூபா 672,921 தொகை அறவிட வேண்டியிருந்தது. வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைக் காலம் நீடிக்கப்படாத கடைகளின் எண்ணிக்கை 24 ஆகும்.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 447,068 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,880,047 |

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கையடக்கத் தொலைபேசிப்பட்டியல் கொடுப்பனவு

தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 ஏப்ரல் 23 ஆந் திகதிய தபபா/ஆ/05/6/பொது கடிதத்தின் மூலம் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா

2,000 தொகையும், 2009 செப்தெம்பர் 02 ஆந் திகதிய தபபா/பரினி/03/09 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உப தலைவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 1,500 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் தலைவரினதும் உப தலைவரினதும் கையடக்கத் தொலைபேசிக்கான இந்த எல்லையினை விஞ்சி 2011 ஆகஸ்ட் தொடக்கம் 2012 ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்காக தொலைபேசி பட்டியல்களைத் தீர்ப்பதற்காக ரூபா 33,064 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரயாணச் செலவு செலுத்துதல்

திகதி, நேரம், பிரயாணம் செய்த இடம், கையளிக்கப்பட்ட செயற்பாடுகளையும் காண்பித்து உரிய படிவத்தில் முறையான கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் பிரயாணச் செலவுகள் செலுத்த வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் சபையின் தலைவரை உள்ளடக்கிய 11 உறுப்பினர்களுக்காக ரூபா 351,000 பெறுமதியான பிரயாணச் செலவினம் மாதாந்த உறுப்பினர் படிகளுடன் சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

2.5 பெகோ இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்துதல்

2010 யூலை 08 ஆந் திகதி சபையினால் ஜே.சீ.பீ பெகோ இயந்திரம் ரூபா 9,500,000 தொகை செலுத்தி தனியார் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான முறையான அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பெகோ இயந்திரத்தை ஈடுபடுத்திய 39 செயற்பாடுகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 1,278,640 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 2010 யூன் 30 ஆந் திகதிய பொதுக் கூட்டத் தீர்மானத்திற்கு முரணாக மூன்று சாரதிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 96,971 தொகையும் சாரதி உதவியாளருக்காக ரூபா 20,062 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் 9 நோக்கங்களை நிறைவேற்றுவதின் கீழ் வருடாந்தம் ரூபா 485,809 தொகையான செயற்பாட்டு இலாபத்தைப் பெறுவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இந்த இயந்திரத்திற்காக ரூபா 3,101,944 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக போதியளவான அறிக்கை பேணப்படாதிருந்தமையினால் இயந்திரத்தின் உரிய செயற்பாட்டு விளைவுகளைக் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

மலிதுவ, பங்கம கொரட்டுவத்த, பம்பவெல்ல பாலத்தை அபிவிருத்தி செய்வதற்காக தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் 2012 இன் உறுப்பினர் நிதியேற்பாட்டின் கீழ் பாலத்தின் இருபக்கமும் வீதிக்கு மண் போடுவதற்கு ரூபா 100,000 தொகையும், 2013 இன் சபையின் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 391,618 தொகையும் செலவிடுவதற்குரிய கோவை மாத்திரம் அலுவலகத்தில் இருந்ததுடன் முன்னைய காலப்பகுதிக்குரியதாகச் செய்யப்பட்ட நிர்மாணங்களுக்குரிய கோவைகளின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் முடியாதிருந்தது.

சபையினால் மேற்கூறப்பட்ட செயற்பாட்டிற்காக பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளில் கீழே குறிப்பிடப்படும் முறையில் குறைபாடுகள் 2013 மே 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

- ❖ பாலத்தின் நீளப் பக்கத்தில் போடப்பட்ட கொங்கிரீட் கீழ் நோக்கி வளைந்திருந்தது.

- ❖ பாலத்தின் நடுப்பகுதியில் சட்டரின் அடிக்கப்பட்ட பகுதி கழற்றி அகற்றப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக அந்தப் பகுதிகளின் சுற்றியுள்ள நிலைமையைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

- ❖ பாலத்தின் நீளப்பகுதியில் போடப்பட்ட கொங்கிரீட் கட்டுக்களில் அனேக இடங்கள் வெடித்திருந்ததுடன் சுற்றிவர கரடுமுரடாகவும் கல் மற்றும் கம்பி என்பன கிளம்பி வெளியில் தெரிவதைக் காணமுடிந்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்டாட் மாதிரி எஸ்சீஏ/4 ஆம் பிரிவின் 5.4.71(அ) இன்

பிரகாரம் அந்த வேலைப்பகுதிகள் மாதிரிகளுக்கு இணங்காத திருப்திகரமற்ற வேலைப்பகுதியாகக் கருதி உடைத்து அகற்றுமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.6.1 நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட 223 ஆம் இலக்க மின்சாரக் கணக்கில் ரூபா 61,882 தொகையான காசு மீதி தொடர்பான எந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.6.2 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 08 கணனிகளின் உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

2.6.3 மீளாய்வாண்டின் போது ரூபா 2,701,375 பெறுமதியுடைய 06 செயற்திட்டங்கள் தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதித் தினம் வரை இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.6.4 2012 இன் மகநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 பெறுமதியுடைய 03 செயற்திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் அந்த செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

2.6.5 மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளாக ரூபா 14,106,750 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 20,098,624 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 5,991,874 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

2.6.6 2002 சனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 09 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,063,728 தொகை

செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பினை ஏற்கவேண்டியிருந்தமையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

2.6.7 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் சபையின் இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

**-------------------------------------**

சபையினால் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

**------------------------------------------------------------**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்